

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (15.10.2025) சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், முனைவர் கோவி. செழியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், அதிகாரிகள் வே.ராஜாராமன், முனைவர் பொ.சங்கர், மரு.இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### விக்கிரவாண்டியில்

# புதிய அறிவுக் களஞ்சியம் நூல் வெளியீடு - தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

திண்டிவனம், அக். 16 - விக்கிரவாண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புதிய அறிவு களஞ்சியம் நூலைவெளியிட்டுதூய்மை பணியாளர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழக திருவண்ணாமலை மண்டல தொடர்பு அலுவலர், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர் நல கூட்டமைப்பின் மாநில துணைத்தலைவரும், விழுப்புரம் வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் பேரணி ரவி எழுதிய பொது அறிவு களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநில தீர்மான குழு துணை தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி தலைமை தாங்கினார். கோதகுமார், முனைவர் செல்வராஜ், சோழன், தண்டபாணி, முனைவர் ஞானமணி, தரணிதரன், முனைவர் சௌந்தர்ராஜன், முனைவர் அமிருதின், ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முனைவர் ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். பேரணி ஊராட்சி மன்ற தலைவர் சேகர் நோக்கவுரை நிகழ்த்தினார். முனைவர் தொல்காப்பியன்தொடக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொது அறிவு களஞ்சியம் நூலை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அருணன், புதுச்சேரி சட்டப்பேரவை முதல்வரின் மொழிபெயர்ப்பு அலுவலர் சுந்தர முருகன், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் தேசிய தலைவர் பெரியண்ணன் ஆகியோர் நூலை பெற்றுக் கொண்டனர்.

விழாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு தூய்மை பணியாளர்கள், கோவில் பணியாளர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், மயிலம் மத்திய ஒன்றிய செயலாளர் செழியன், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் நெடிசுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர் ரவி, மாவட்ட பிரதிநிதி பிரகாஷ், மயிலம் மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரமேஷ், தலைமையாசிரியர் சுந்தரவடிவேல், தெற்கு மாவட்ட விவசாயி தலைவர் பாபு ஜீவானந்தம், பிச்சைக்குப்பன், ஒன்றிய கவுன்சிலர் அஞ்சலாட்சி கிருஷ்ணமூர்த்தி, அரசு ஒப்பந்ததாரர் கலியபெருமாள், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பரமேஸ்வரன், கொடியும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வள்ளி விஜயன், ராமலிங்கம், சுப்பிரமணி படையாட்சி, ஸ்டாலின், பிரகாஷ், பேரணி கிளை கழக நிர்வாகிகள் வீரபாண்டியன், பலராமன், கலியமூர்த்தி, ஆச்சாரி குமரகுருபன், சுந்தரபாண்டியன், தன மூர்த்தி விழா ஏற்பட்டாளர்கள் சரவணன், ராஜாராமன், சீனிவாசன், விநாயகம், முருகன், பாலமுருகன், நாராயணன், சிவகுமார், சீனிவாசன், பாபு, வேலு, அருள்ஜோதி, கமலக்கண்ணன், பிரகாஷ், தங்கமணி, சுதர்சனம், இளங்கோ உள்ளிட்டோர். கலந்து கொண்டனர்.

ஒன்றிய இலக்கிய அணி துணை செயலாளர் பாக்யராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.



ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், கே.சண்முகபுரம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின், ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் மின்மாற்றியை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், அன்புராஜன் இம்மானுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரங்கிமலை எஸ். வேணுகோபால்
### அக்டோபர் 16 (1994)



இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோன்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோன்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

“பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி, மண்டபம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக பெருங்குளத்தில் நடைபெற்ற கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கலந்து கொண்டு வாக்காளர் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட எதிர்வரும் தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மேலும் கழக நிர்வாகிகளுக்கு தீபாவளி பரிசு பொருட்களை வழங்கினார். மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ஜெ. பிரவின் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார்.

### நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல்

# நடிக்கும் அன்புமணிக்கு நாம் எதையும் சொல்ல முடியாது!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கண்டனம்!

சென்னை, அக்.16 -

தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு எப்போதெல்லாம் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு நல்லது நடக்கிறதோ அப்போதெல்லாம் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணத்தினால் அந்த வேலைவாய்ப்பில் விளையாடுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அப்படி ஒருவர் தனது குடும்பச் சண்டையில் உள்ள வன்மத்தை தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தில் கொட்டித் தீர்க்கிறார்.



இன்றைய உலக அரசியல் சூழலில் ஒரு முதலீட்டை இந்தியாவிற்குள் கொண்டுவருவது எவ்வளவு கடினம் ! அதிலுள்ள Geopolitical issues என்னென்ன என்பதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி மிகுந்த சிறுபிள்ளைத்தனமான அறிக்கையை வெளியிடுவதை இனி அவர் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

நேற்று பாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15,000 கோடி முதலீடு செய்து 14,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்தது என்பது உறுதியான, சரியான, எந்த விதத் தவறும் இல்லாத 100/100 உண்மையான செய்தி. இது ஏறத்தாழ ஒரு வருடப் போராட்டத்திற்கு பிறகு உறுதி ஆகியிருக்கும் வேலைவாய்ப்புகள். பல மாதங்களாக ஒரு சில ஊடகங்கள் அரசு எந்தவித MoU செய்தியையும் உறுதி செய்யாத சூழலில் அவர்களாக யூகித்து எழுதிய செய்திகளை பழைய திட்டம் என்று கூறுவது ஏற்புடையதல்ல. ஒரு திட்டம் வேலை வாய்ப்புகளாக மாறும் என்று அரசுக்கு முழுமையான நம்பிக்கை வந்த பிறகே அதை துறையோ அல்லது நானோ உற்திசெய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல் யார் எதற்காக எதைச் சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளாமல், அல்லது புரிந்துகொள்ள முடியாமல், அல்லது புரிந்து கொண்டே நடிப்பவர்களுக்கு நாம் எதையும் சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் -

# வாரிசுதாரர்களான 315 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## நல வாரியத்தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி. வெ.ஆறுச்சாமி வழங்கினார்!

பெரம்பலூர், அக்.16–

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் சார்பில் நடத்தப்பட்ட.நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு நலத் திட்ட உதவிகளையும், தூய்மைப் பணியாளர்கள் உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.

இயற்கை மரண உதவி தொகை ரூ.25ஆயிரத்துக் கான காசோலையையும்,1 பயனாளிக்கு திருமண உதவித்தொகை ரூ,5 ஆயிரத்துக் கான காசோலையையும் என ரூ.30ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், 313 தூய்மை பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகளையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் வழங்கினார்.

பின்னர், தூய்மை பணியாளர்களிடம் தேவைகள் மற்றும் இதர கோரிக்கைகள் தொடர்பாக தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தலைவர் அவர்கள் கேட்டறிந்து, தொடர்புடைய துறைகள் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கக் கூடிய கோரிக்கைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு செயல்படுத்தக் கூடிய அனைத்து திட்டங்களும் முறையாக கிடைத்திடவும், மாதந்தோறும் குறித்த காலத்திற்குள் மாத ஊதியமும், அடிப்படை வசதிகளான கை, கால் உறை, சோப்பு உள்ளிட்டவைகளை பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வழங்கிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்

அந்த வகையில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு வருடம் தோறும் ரூ.15 கோடி நிதி ஒதுக்கி வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். தற்போது தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 3,20,000 உறுப்பினர்கள் பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர்.

மேலும், எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 10 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது பதிவு செய்துள்ள உறுப்பினர்களைத் தவிர தனியார் மருத்துவமனைகள், தனியார் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் அனைவரையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் போது போது ஏற்படும் மரணங்களை தவிர்க்கும் வகையில், ரோபோடிக் என்று அழைக்கக்கூடிய நவீன இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியா ளர்கள் நல வாரியத்திற்கு என்னென்ன தேவை என்பதைக் கண்டறிந்து அவற்றையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கேட்டு கோரிக்கை வைத்துள்ளீர்கள், உங்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதிபெற்று நடவடிக்கை எடுக்கப் படும்.


தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் வெளி நாடு சென்று படிப்பதற்கு இது வரை ரூ.15 லட்சம் வழங்கப்பட்டு வந்தது. இதனை ரூ.35 லட்சமாக உயர்த்தி வழங்கவும், விபத்து மரண உதவித்தொகையாக வழங்கப்பட்டு வரும் ரூ.5 லட்சத்தை ரூ.8 லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய மாநில உறுப்பினர் நா.சேகர், மாவட்ட தாட்கோ மேலாளர் க.கவியரசு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வி.வாசுதேவன், தாட்கோ திட்டக்குழு உறுப்பினர் மா.அருண் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தி.கு. சண்முகம்
### அக்டோபர் 16 (2023)



கழகம் துவக்கப்பட்ட நாள் முதல் பணியாற்றி வந்தவர்.

கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், பேரூர் பிரதிநிதி, ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, பள்ளிபாளையம் ஒன்றியச் செயலாளர், முப்பது ஆண்டுகள் தொடர்ந்து குமாரபாளையம் நகரச் செயலாளர், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட துணைச் செயலாளர், ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட அவைத் தலைவர் என கழகத்தில் படிப்படியாக பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

குமாரபாளையத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கழகப் பொதுக்குழு நடைபெற்றபோது முக்கிய பங்காற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**